# திருமறைத்தீபம்

**THE BIBLE LAMP**

மலர் 1 | ஒக்டோபர் - டிசம்பர் 1995 | இதழ் 4


## அறிஞர் வாக்கு

"கடவுளால் தீர்க்க முடியாத பிரச்சனைகளே இல்லை எனலாம். அக்கடவுள் நம் தேவனாக இருந்தால் நம்வாழ்வில் எந்தப் பிரச்சனையுமே தீர்க்கப்பட முடியாத தொன்றாக இருக்காது. இவ்வுலக வாழ்க்கையில் நாம் சந்திக்கும் எந்தப் பிரச்சனையையும் தீர்க்கக்கூடியவராக கர்த்தர் இருக்கிறார். எம்மை அணுகும் எந்தத் தீங்கையும், நமக்குப் பயனளிப்பதாக மாற்றக்கூடிய வல்லமையும் ஞானமும் அவரிடத்தில் உண்டு."

மொரிஸ் ரொபட்ஸ்

## இந்த இதழில்



- ஆசிரியரின் மடல்
- திருச்சபை
- வில்லியம் கேரி
- திருமறைக்கல்வி
- கிருபையின் போதனைகள்
- அன்புள்ள...!
- எண்ணங்கள்
- கேள்வி? பதில்!


# ஓராண்டு 1 நிறைவு

அன்புள்ள வாசகர்களே,

திருமறைத்தீபம் கர்த்தரின் எல்லையற்ற கிருபையால் ஓராண்டை நிறைவு செய்யவிருக்கிறது. மகத்தான சாதனைகள் புரியப்போவதாக மார்தட்டி இப்பத்திரிகை எழாவிட்டாலும், இருதயசுத்தியோடு, தெளிவான குறிக் கோள்களை மனதில் கொண்டே இதை நாம் தொடங்கினோம். ஓராண்டு கழியப்போகிறது.. சாதித்தது என்ன? வாசகர்கள் அதிகரித்துள்ளார்கள். அவர்களை இப்பத்திரிகை அடையச் செய்ய வேண்டிய பொறுப்பும் அதிகரித்துள்ளது. பலரை இப்பத்திரிகை சிந்திக்க வைத்துள்ளது. சிறப்பான ஒரு ஆசீர்வாதம். சிந்திக்க மறுக்கும் கூட்டத்தாரையே நாம் சுற்றிவர அவதானிக்கும் இந்நாட்களில் கிறிஸ்தவர்கள் சிந்திக்கிறார்களா? என்னே அற்புதம்! ஆரம்பத்தில் போதகர்கள், கிறிஸ்தவ ஊழியர்களின் பயன்கருதியே இதை நாம் ஆரம்பித்த போதும், அனைவருமே இதன்மூலம் பயனடைவதை அறிந்து நாம் மகிழ்கிறோம். மூன்று இதழ்களின் மூலம் இதைவிடச் சிறப்பாக நாம் எதை எதிர்பார்த்துவிட முடியும்? மனிதன் சாதிக்கக்கூடிய செயல்களா இவை? என்றும் மாறா சர்வவல்லமையுள்ள கர்த்தரின் செயல்களே இவை. அவருக்கே எல்லாக் கீர்த்தியும் மகிமையும் உரித்தாகும்.

வாசகர்கள் தொகை அதிகரித்திருப்பதால் தமிழகத்து வாசகர்களுக்கான பிரதிகளை சேலத்தில் அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம். ஆகவே உங்கள் பிரதிகள் சேலத்திலிருந்தே உங்கள் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும். ஆசிரியருக்கு எழுதும் கடிதங்களைத் தொடர்ந்து நியூசிலாந்து முகவரிக்கே எழுதுங்கள். பத்திரிகை உங்களை வந்தடைகிறது, அதன் மூலம் நீங்கள் பயனடைகிறீர்கள் என்பதை உங்கள் கடிதத்தின் மூலம் மட்டுமே நாங்கள் அறிந்து கொள்ள முடியும். ஏனைய நாடுகளுக்கான பிரதிகள் தொடர்ந்து நியூசிலாந்திலிருந்தே அனுப்பிவைக்கப்படும்.



எத்தனை வேகமாக இவ்வருடம் உருண்டோடி விட்டது. காலம் நமக்காகக் காத்திருப்பதில்லை. சாதிக்கவேண்டிய காரியங்களும் அநேகம். கர்த்தர் தயவோடு தந்துள்ள காலத்தை நாம் கருத்தோடு பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? வரப்போகும் புதுவருடம் பலருடைய வாழ்வில் வளமூட்ட ஜெபிப்போம். கர்த்தரை அறியாத மக்கள் அவரை அறிந்து கொள்ள நம்மை அவர் ஒரு கருவியாகப்பயன்படுத்த சித்தங்கொள்ள ஜெபிப்போம். திருச்சபை மக்களும், கிறிஸ்தவர்களும் எவ்விதப் போலிப்போதனைகளுக்கும் தம்மை ஒப்புக்கொடாது நிலையான சத்தியத்தை மட்டும் பின்பற்றி வாழ ஜெபிப்போம். அவருடைய சபை இல்லாத இடங்களிலெல்லாம் சத்தியத்தை வளர்க்கும் திருச்சபைகள் தோன்றி அவரது நாமம் மகிமை பெற அயராது உழைப்போம்.

அன்புடன்,
ஆசிரியர்

# கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை

*கர்த்தர் இவ்வுலகில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை, இன்று என்றுமே இல்லாத அளவிற்குப் பேராபத்து சூழ்ந்துள்ளது. இந்தப் பேராபத்து திருச்சபையை தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இல்லாமல், அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், அலட்சியப்படுத்துவதாக அமைந்துள்ளது. திருச்சபைக்கும், அதுபற்றித் திருமறை தரும் போதனைகளுக்கும் இன்று எங்கும் மதிப்பில்லை. திருமறையை அலட்சியம் செய்து, திருச்சபை என்ற பெயரில் கேலிக்கூத்துகள் நடத்துபவர்களும், திருச்சபையே தேவையில்லை என்று ஆணவத்தோடு அலைபவர்களுமே இன்று அவனியிலே பவனி வருகிறார்கள். திருமறை தெளிவோடு போதிக்கும், கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமான திருச்சபையைப் பற்றிய திருமறையின் போதனையை இத்தொடர்கட்டுரை அலசுகிறது. - ஆசிரியர்.*

## பாகம் - 2

திருச்சபைக்கு இன்று ஏற்பட்டுள்ள ஆபத்தையும்,கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் பல அதன் வளர்ச்சிக்கு இடையூறாக இருப்பதையும் கடந்த இதழில் பார்த்தோம். திருச்சபையைப் பற்றிய வேதபூர்வமான அறிவும், அதன் வளர்ச்சிகுறித்த வாஞ்சையும் இல்லாததாலேயே பலர் அதற்கு இடையூறாக அமைந்து விடுகிறார்கள். சமீபத்தில் நான் தமிழகத்தில் இருந்தபோது சில இளைஞர்களோடு இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்களில் ஒருவர் "ஐயா, நான் இயேசுவை அறிந்து கொண்டபோதே அவர் என்னைத் தன்சபையில் அங்கத்தவனாக சேர்த்துக் கொண்டுவிட்டாரே, அது போதாதா? ஒரு சபையில் நான் ஏன் தொடர்ந்து அங்கத்தவனாக இருக்க வேண்டும்" என்ற விதத்தில் பேசினார். சபையைப் பற்றியும், சபை அங்கத்துவத்தைப் பற்றியும் இத்தகைய தவறான எண்ணங்களைப் பலர், எல்லா நாடுகளிலும் கொண்டுள்ளார்கள். ஆகவே வேதம் போதிக்கும் திருச்சபை எது? இவ்வுலகில் அத்திருச்சபை அவரது வார்த்தையின்படி எப்படிக்கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று நாம் பார்த்தல் அவசியம்.

## திருமறையில் திருச்சபை

திருமறையில் சபையைக்குறிக்க ஒரே வார்த்தையே பயன்படுத்தப்பட்டாலும் சபையைப்பற்றிய வேதபூர்வமான உண்மைகளை விளங்கிக்கொள்ள வேதவல்லுனர்கள் "உள்ளூர்சபை" "உலகளாவிய சபை" ஆகிய பதங்களைப் பயன்படுத்துகிறார்கள். சில உண்மைகளைத் தெளிவுபடுத்த வார்த்தைப் பிரயோகங்கள் அவசியம். அவற்றை நாம் சரிவரப்பயன்படுத்த வேண்டியதும், புரிந்து கொள்ள வேண்டியதும் அவசியம். இன்று அநேகர் இவ்வார்த்தைப் பிரயோகங்களை அவை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று புரிந்து கொள்ள முற்படாமல் திருச்சபை பற்றிய உண்மைகளை அலட்சியம் செய்கிறார்கள்.

### உள்ளூர் சபை

சபையைக்குறிக்கும் கிரேக்க வார்த்தையான "எக்லேசியா" (*Ekklesia*) புதிய ஏற்பாட்டில் 115 தடவைகள் காணப்படுகின்றது. "ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்களின் ஒன்றுகூடல்" என்பது இவ்வார்த்தையின் பொருள். இவ்வார்த்தை நூற்றிப்பத்துத் தடவைகள், ஆவியின் கிரியையின் மூலம் தங்கள் வாழ்க்கையில் இரட்சிப்பை அனுபவித்தவர்கள் சபையாக ஒன்றுகூடிவருதலைக் குறிக்கப்பயன்படுத்தப்படுகின்றது. இவற்றிலும் தொண்ணூருக்கும் அதிகமான தடவைகள் நாம் கண்களால் எல்லா நாடுகளிலும் காணமுடிகின்ற, உள்ளூர் சபைகளையே (*Local church*) இவ்வார்த்தை குறிக்கின்றது. உதாரணமாக அப்போஸ்தலர் 20:17-ல் பவுல் 'சபை' மூப்பர்களை அழைப்பதைப் பார்க்கிறோம். 1 கொரி.1:2, பவுலின் கடிதம் கொரிந்திலிருந்த உள்ளூர் சபைக்கு எழுதப்பட்டதை உணர்த்துகின்றது. அதேபோல, கலாத்தியர் 1:2; வெளி. 1:2, 2:1 ஆகிய வசனங்கள் அந்நிருபங்கள் உள்ளூர் சபைகளுக்கே எழுதப்பட்டதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

### உலகளாவிய சபை

அதேவேளை 'எக்லேசியா' என்ற இவ்வார்த்தை புதிய எற்பாட்டில் உள்ளூர் சபையை மட்டுமல்லாது, நாம் கண்களால் காணமுடியாத 'உலகளாவிய சபையையும்' (*Universal church*) குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உலகம் தோன்றுவதற்குமுன்பே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு இவ்வுலகில் கடந்த காலத்தில் வாழ்ந்த, நிகழ்காலத்தில் வாழ்கின்ற, எதிர்காலத்தில் தேவனிடத்தில் வரப்போகின்ற, அனைத்துக் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய சபையையே உலகளாவிய சபை என அழைக்கிறோம். இவ்வுண்மையையே பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் ". . அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" என்று விளக்குகிறார். இங்கே உலகளாவிய சபையைப்பற்றிய உண்மை உள்ளூர்சபையாகிய எபேசிய சபைக்குப் பயன்படுத்தப்படுவதையும் அவதானிக்கிறோம். திருச்சபையின் உண்மைத் தன்மையைச் சரிவரப் புரிந்துகொள்ள இவ்வார்த்தைப்பிரயோகங்களை நாம் பயன்படுத்துகிறோம்.

கீழ்வரும் விளக்கங்களை நாம் மனதில் கொள்ளல் அவசியம்.

1. திருமறை போதிக்கும் திருச்சபையைப் பற்றிய உண்மைகளை இந்த இரண்டு வார்த்தைப் பிரயோகங்களையும் பயன்படுத்தி நாம் புரிந்து கொள்ள முயல்கிறோம். தேவனுடைய சபை ஒன்றே. இரண்டு சபைகள் இருப்பதாக நாம் தவறாகப்புரிந்து கொள்ளக்கூடாது. நடைமுறையில் நாம் நமது ஊனக்கண்களால் காணக்கூடியது உள்ளூர்சபைகளை மட்டுமே என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகளாவிய சபை எப்பொழுதும் இவ்வுலகில் உள்ளூர் சபைகளாகக் காட்சியளிக்கும். கிறிஸ்துவை அறிந்து கொண்டு அவரது உலகளாவிய சபையில் அங்கத்துவம் பெறும் எவரும் நடைமுறையில் நிச்சயம் உள்ளூர்சபை அங்கத்தவராக இருத்தல் அவசியம். சபையைப்பற்றிய உண்மைகளை இந்த இரண்டு விதத்தில் அல்லாது வேறுவிதமாகப் புரிந்து கொள்ள முயலக்கூடாது.

2. ஒருவரது உள்ளூர்சபை அங்கத்துவம் எப்போதுமே உலகளாவிய சபையின் அங்கத்துவத்தோடு தொடர்புடையதாக இருந்து விடாது. அதேபோல ஒருவரது உலகளாவிய சபை அங்கத்துவமும், எப்போதுமே அவரது உள்ளூர் சபை அங்கத்துவத்தோடு தொடர்புடையதாக இருந்துவிடாது. ஏனெனில் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள், சபையின் கவனக்குறைவால் தவறாக உள்ளூர் சபையில் அங்கத்தவர்களாக சேர்ந்து விடலாம். அதேபோல், உலகளாவிய சபையில் அங்கத்துவம் பெற்றவர்கள் சந்தர்ப்ப வசத்தாலோ அல்லது சபையைப்பற்றிய அறிவின்மையாலோ குறுகிய காலத்திற்கு உள்ளூர் சபையில் அங்கத்துவர்களாக இல்லாது இருந்து விடலாம் (உதாரணம்: அப்.8 - எத்தியோப்பியன்). ஆகவே உலகில் காணப்படும் அத்தனை உள்ளூர் சபைகளையும் ஒன்று சேர்த்தால் அது உலகளாவிய சபையாக மாறிவிடாது.

3. நாம் கடந்த இதழில் பார்த்ததுபோல் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் உள்ளூர் சபைகளல்ல. கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் ஒருகுறிப்பிட்ட நோக்கத்திற்காகவே செயல்படுவதாலும், வேத அடிப்படையில் அமையாததாலும் அவை சபைகளாகிவிட முடியாது. ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனமோ, அருட்பணி இயக்கமோ, அல்லது வேதாகமக் கல்லூரியோ சபைக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ள திருவருட் சாதனங்களான திருமுழுக்கு, திருவிருந்து, ஆராதனை, அருளுரை, சபை ஒழுங்கு ஆகியவற்றைப் பயன்படுத்த முடியாது. இவ்விஸ்தாபனங்கள் கிறிஸ்தவ ஊழியங்களில் ஈடுபட்டிருந்த போதும் சபையில் மட்டுமே ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆசீர்வாதங்களை இவற்றால் அளிக்க முடியாது. உண்மையில் கூறப்போனால் எல்லா ஊழியங்களுமே சபையில் ஏற்பட்டு, சபை மூலமாகவே செய்யப்பட வேண்டும். இன்று பலர் கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் அங்கத்தவர்களாக இருந்து ஊழியக்காரர்கள் என்ற போர்வையில் சபை வாழ்க்கையையே முற்றாகப் புறக்கணித்து வருகிறார்கள். தேவனுடைய வார்த்தையில் உள்ள போதனைகள் அனைத்தும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் சபையில் அங்கத்தவனாக

**கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே செயல்படுவதாலும், வேத அடிப்படையில் அமையாததாலும் அவை சபைகளாகிவிட முடியாது. . . . இவ்விஸ்தாபனங்கள் கிறிஸ்தவ ஊழியங்களில் ஈடுபட்டிருந்த போதும் சபையில் மட்டுமே ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆசீர்வாதங்களை இவற்றால் அளிக்க முடியாது. உண்மையில் கூறப்போனால் எல்லா ஊழியங்களுமே சபையில் ஏற்பட்டு, சபை மூலமாகவே செய்யப்பட வேண்டும்.**

இருந்து கடைப்பிடிக்கவே கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ ஸ்தாபனங்களை நாம் உள்ளூர் சபைகளாகவோ அல்லது உலகளாவிய சபையின் ஒரு அங்கமாகவோ ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் அவை நாம் எற்கனவே அவதானித்த சபைக்கிருக்க வேண்டிய எந்த ஒரு அடையாளத்தையும் தம்மில் கொண்டிருக்கவில்லை.

## எது மெய்யான சபை ?

ஒருமுறை நான் தமிழ்நாட்டில் சந்தித்த ஒரு முதிய கிறிஸ்தவ நண்பர், ஐயா நான் வசிக்கும் இந்தத் தெருவில் மட்டும் இருபது பாப்திஸ்து குழுக்களைச் (Baptist denominations) சேர்ந்த சபைகள் இருக்கின்றன. இதில் எது உண்மையான சபை? என்ற கேள்வியைக் கேட்டார். அது சரியான கேள்விதான். நாம் வாழும் குழப்பமான சூழ்நிலையில் வேதத்தின் அடிப்படையில் அமையப் பெற்று, கர்த்தரை மகிமைப்படுத்தி வரும் ஒரு சபையைக் கண்டுபிடிப்பது இலகுவான காரியமல்ல. ஆனால் அது ஆகக்கூடாத ஒரு காரியமுமல்ல. சபையைப்பற்றி ஏற்கனவே நம் மனதிலிருக்கின்ற தவறான எண்ணங்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவைத்துவிட்டு சபைக்கிருக்க வேண்டிய, வேதம் போதிக்கும் அடையாளங்களை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டு, அவ்வடையாளங்களைக் கொண்ட சபைகளை நாடிச்செல்ல வேண்டும். அப்படி வேதம் காட்டித்தரும் அடையாளங்கள் யாவை? பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜோன் கல்வின் என்ற வேத வல்லுனர், திருச்சபைக்கிருக்க வேண்டிய அடையாளங்களைப்பற்றிக் குறிப்பிடும் போது, ஒரு சபை வேதபூர்வமான சபையாக அமைய அது மூன்று முக்கிய அம்சங்களைத் தன்னில் கொண்டிருக்க வேண்டும் என்று கூறினார். முதலாவதாக அச்சபையில் வேதம் தெளிவாக, கர்த்தரை மகிமைப்படுத்தும் விதத்தில் போதிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, அங்கே, வேதபூர்வமான முறையில் திருமுழுக்கும், திருவிருந்தும் கொடுக்கப்பட வேண்டும். இறுதியாக, ஒழுங்குக்கட்டுப்பாடு வேத அடிப்படையில் அங்கே கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஒரு சபை மெய்யான சபையாக அமைய இம்மூன்று காரியங்களும் நடைமுறையில் இருத்தல் அவசியம். ஒரு சபையில் எது இருந்த போதும் இம்மூன்று அம்சங்களும் காணப்படாவிட்டால் அது மெய்யான சபையாக இருக்க முடியாது.

கல்வின் கூறிய இவ்வம்சங்களைத் தம்மில் கொண்டிருப்பதாக பல சபைகள் இன்று வாதாடலாம். ஆனால் பெயரளவில் இவற்றைக் கொண்டிராமல் உயிர்த்துடிப்புள்ளதாக திருச்சபைகள் இருக்க வேண்டுமென்பதே திருமறையின் எதிர்பார்ப்பு. ஒரு சபை உயிர்த்துடிப்புள்ளதாக இருப்பதெப்படி? கீழ்வரும் தன்மைகளைத் தம்மில் கொண்டிருப்பவையே அத்தகைய சபைகள்.

**அ. உயிர்த்துடிப்புள்ள சபைகளிலே ஐக்கியம் எப்போதும் வலியுறுத்தப்படும்** (எபேசியர் 4:3-6; 5:23-27; I கொரி. 12). "அன்பினால்

ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள்" என்று பவுல் எபேசியருக்கு எழுதுகிறார். ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே சபை; அதற்குத் தலை இயேசு கிறிஸ்து. ஆகவே உள்ளூர் சபைகளில் இந்த ஒற்றுமையும், ஐக்கியமும் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும். இவ்வைக்கியம் ஆவிக்குரியது. இதனை மனித ஞானத்தினாலும், திட்டங்களினாலும் ஏற்படுத்திவிட முடியாது. ஒரே சத்தியத்தைக் கடைப்பிடித்து ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைவதால் மட்டுமே இதனைக் காக்க முடியும். இதைக்குறித்தே யோவானும், "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடு ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவன் 1:5-7) என்று விளக்குகின்றார்.

**ஆ. பரிசுத்தத்திற்கு அத்தகைய சபைகளில் முதலிடம் கொடுக்கப்படும்.** உலகளாவிய சபை ஆவியினால் பிறந்தவர்களை மட்டுமே தன்னில் அங்கத்தவராகக் கொண்டிருக்கும். அவர்கள் தேவனைப்பின்பற்றி பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதற்காக அழைக்கப்பட்டவர்கள். ஆகவே உள்ளூர் சபைகளும் அத்தகையவர்களை மட்டுமே அங்கத்தவராகக் கொண்டிருக்க வேண்டும். பேதுரு இவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப்பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1 பேதுரு 1:5) என்று கூறுகிறார். பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபையைக் குறித்து, "இவர்கள் பரிசுத்தமாக்கப் பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபை" என்று கூறுகின்றார். தேவனுடைய சபைகளும், கிறிஸ்தவர்களும் இவ்வுலகில் பூரண பரிசுத்தத்தை எக்காலத்திலும் அடைய முடியாதிருந்த போதும், அத்தகைய வாழ்க்கையை வாழ்வதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்பது திருமறையின் போதனை (2 கொரி. 6:11-18).

**இ. அவை அப்போஸ்தலருடைய போதனைகளையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்றும் சபைகளாக இருக்கும்** (அப்போஸ்தலர் 2:42). அப்போஸ்தலர் நடபடிகள் 2:42 இல் குறிக்கப்பட்டுள்ள அம்சங்களைத் தவறாது தொடர்ந்து கடைப்பிடிக்கும் சபைகளே உயிர்த்துடிப்புள்ள சபைகளாக அமையமுடியும். அப்போஸ்தலர் இன்று எம்மத்தியில் இல்லை, ஆனால் அவர்களுடைய போதனைகள் அனைத்தும் திருமறையில் அடங்கியுள்ளன. ஆகவே அப்போஸ்தலருடைய எல்லாப் போதனைகளையும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது திருச்சபையின் கடமை. இதுபுரியாமல் கத்தோலிக்க சபைகள் இன்று பாப்பாண்டவரைத் தொடர்ந்து வரும் அப்போஸ்தலப் பிரதிநிதியாகக் கருதுவதும், 'கெரிஸ்மெட்டிக் இயக்கத்தார்' அப்போஸ்தலரைத் தொடர்ந்து சபைகளில் நியமிக்க முற்படுவதும், அவர்கள் செய்த அற்புதங்களைச் செய்யமுற்படுவதும் வேடிக்கையான செயல்கள். ஆனால் வேதமோ அப்போஸ்தலருடைய போதனைகளுக்கு உட்பட்டு வாழ்க்கை நடத்தும் சபைகளே மெய்யான சபைகள் என்று தெளிவாகத் தெரிவிக்கின்றது. (எபேசியர் 2:19-20).

வேதம் போதிக்கும் இத்தகைய அடையாளங்களைக் கொண்டு அமையாமல், அவற்றைத் தம்மில் வளர்க்க எத்தனிக்காமல் வெறுமனே கட்டிடங்களையும், மக்களையும் மட்டும் கொண்டிருப்பதால் எந்த ஒரு கூட்டமும் சபையாக மாறிவிட முடியாது. சபைக்குக் கிறிஸ்து தலைவராக இருக்கிறார். அவருடைய கட்டளைகளின்படியும், வழிகளின்படியுமே சபைகள் அமைய வேண்டும், வளர வேண்டும்.

இப்பத்திரிகையின் மேலதிக பிரதிகள் தேவையானோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். இதனை ஏனையோருக்கும் அறிமுகப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**The Bible Lamp**
**P O Box 62-159**
**Sylvia Park**
**Auckland**
**New Zealand**

## உள்ளூர்சபை அங்கத்துவம் அவசியமா ?

திருச்சபை அங்கத்துவத்தைப்பற்றிய தவறான எண்ணங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருப்பதை எல்லா நாடுகளிலுமே காண முடிகின்றது. ஒருமுறை எனது சபையில் நான் நடத்திய சபை அங்கத்துவத்தைப் பற்றிய வகுப்புகளில் கலந்து கொண்ட ஒரு பெண் அவ்வகுப்புகள் முடிந்த பின், திருச்சபை அங்கத்துவம் பற்றி வேதம் எங்குமே எடுத்துக்கூறவில்லை என்று வாதித்து நான்கு பக்கங்களில் எழுதித் தந்தார். அந்தப் பெண்ணோடு பின்பு இதுபற்றி நான் பேசியபோது வேதத்தை எப்படிப்புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் அறியாதிருப்பதை அவதானித்தேன். அதுமட்டுமல்லாமல் அவர் இதற்கு முன்பு இருந்த சபைகளில் ஒன்றிலாவது சபை அங்கத்துவத்தைப் பற்றிய எந்தவிதப் போதனையும் கொடுக்கப்படவில்லை என்பதையும் உணர்ந்தேன். இதற்குக் காரணம் என்ன என்று நான் சிந்தித்தபோது எந்தளவுக்கு திருச்சபை பற்றிய போதனை குறைவாக உள்ளது என்று உணர முடிந்தது.

சிலசபைகள், சபை அங்கத்துவத்தை நடைமுறையில் கடைப்பிடிப்பதில்லை. சபைக்கு வந்த நாளில் இருந்து ஒரு கிறிஸ்தவன் அங்கத்தவன், அவர் என்று தான் வருவதை நிறுத்தி விடுகிறாரோ அன்றிலிருந்து அவர் அங்கத்தவர் இல்லை என்றவிதத்தில் நடந்து கொள்கிறார்கள். இவர்கள், வேதம் சபை அங்கத்துவத்தைப் பற்றி எந்தவிதமான போதனையும் தரவில்லை என்று நம்புகிறார்கள். இப் பிரச்சனையை எதிர்கொள்ள நாம் திருமறையை நாடி வரவேண்டும். திருமறை போதிக்கும் திருச்சபை அங்கத்துவத்தை நாம் எப்படிப் புரிந்து கொள்வது? இங்கே நான், 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையில் (1689 Baptist Confession of Faith) வேதத்தைப்படிக்க வேண்டிய முறைபற்றிக் குறிப்பிட்டுள்ள முக்கிய பகுதியை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இப்பகுதி வேதத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டிய முறையைப்பற்றி விவரிக்கிறது. அவ்வறிக்கையின் முதல் அதிகாரத்தின் ஆறாம் பகுதியில் கீழ்வரும் விளக்கத்தைக் காண்கிறோம். "அவரது மகிமைக்கும், மனிதனுடைய இரட்சிப்பிற்கும், விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான தேவனுடைய எல்லாத் திட்டங்களும் பரிசுத்த வேதாகமத்தில் திட்டவட்டமாக (வெளிப்படையாக) அல்லது உள்ளடக்க

(கடைசிப்பக்கம் பார்க்க)

# வில்லியம் கேரி



**'கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்' என்று கூறி, வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கே மகோன்னதமாக சேவை செய்தவரும், நவீனகால அருட்பணி ஊழியத்திற்கு அடிக்கல் நாட்டியவருமான வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம்.**

வில்லியம் கேரியின் தாயார் ஒருமுறை தன்வீட்டிற்கு வந்த போதகரிடம் 'என் மகன் ஒரு பிரசங்கியாக வரக்கூடிய வாய்ப்பிருக்கிறதா? என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த போதகர், 'நிச்சயமாக, கர்த்தர் அவனோடிருந்தால் ஒரு பெரிய பிரசங்கியாகக்கூட வரலாம்' என்று கூறினார். அவர்கள் இருவருக்கும் வில்லியத்தின் எதிர்காலத்தைப்பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. இருந்த போதும் வீட்டிலும், வெளியிலும் இளம் வில்லியத்தின் கிறிஸ்தவ சாட்சி எவர் கண்களுக்கும் தப்பவில்லை. கேரியின் நடவடிக்கைகள் அவருடைய சகோதரிகளுக்குப் பெருந்தொல்லையாக இருந்தது. வீட்டிலிருந்த சீட்டுக்கட்டுக்களை கேரி அடுப்பில் எறிந்தார். வீட்டில் குடும்ப ஜெபத்தைத் தான் நடத்த அனுமதி தருமாறு தாயிடம் மன்றாடினார். வாஞ்சையோடும், உறுதியோடும் அனுதினமும் ஒலித்த கேரியின் ஜெபம் வீட்டிலிருந்தவர்களை அசைத்தது. அதேவேளை 'ஒத்துழையாவாதிகளின்' ஆராதனைக் கூட்டங்களிலும் கேரி பிரசங்கிக்கத் தொடங்கினார்.

ஜோன் ரைலன்டிடம் முழுக்கு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்ட கேரி, ஹெக்கிள்டன் கிராமத்து சபையில் அங்கத்தவராக இருந்தார். இவ்வாரம்ப காலங்களிலேயே தேவனை அறியாத மக்களின் நிலைகுறித்து கேரியின் உள்ளத்தில் பெரும் வருத்தம் இருந்தது. யாரிடமோ இரவல் வாங்கி வாசித்த 'கேப்டன் குக்கின் பிரயாண அனுபவங்கள்' என்ற நூல் கேரியின் உள்ளத்தில் இருந்த தாகத்தை மேலும் அதிகரித்தது. அன்று முதல் தேவனை அறியாத உலகத்து மக்களுக்கு நற்செய்தியைக் கொடுக்க வேண்டுமெனக் கனாக்காணத் தொடங்கினார். இக் காலங்களில் சப்பாத்துத் தொழில் செய்வது மட்டுமன்றி, பாடசாலையில் போதிப்ப திலும், கிரேக்க மொழி மற்றும், வேதசத்தியங்களை முறையாகக் கற்பதிலும் கேரி உறுதியாக இருந்தார். தனது ஊழியத்தைச் செய்ய அழைக்கும் எவரையும் தேவனே தயார் செய்கிறார் என்பதற்கான அத்தனை அத்தாட்சிகளும் இளம் வில்லியத்தின் வாழ்க்கையில் காணப்பட்டன.

1785 ஆம் ஆண்டு கேரி தன் குடும்பத்தாரோடு மோல்டன் என்ற கிராமத்திற்குக் குடி பெயர்ந்தார். இக்கிராமத்தில் அவர் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். தனக்குப் பிடித்த சப்பாத்துத் தொழிலையும் அவர் விட்டுவிடவில்லை. இவ்விரு வருமானங்களும் அவர் குடும்பம் நடத்தத் துணைபுரிந்தன. மோல்டன் கிராமத்தைச் சேர்ந்த பாப்திஸ்து சபையாருக்கு கேரியின் வருகை பேரானந்தத்தை அளித்தது. ஜோன் பன்யன் காலந்தொடக்கம் இருந்து வந்த இப்பாப்திஸ்துசபை, போதகர்கள் இல்லாமையினால் வளர்ச்சிகுன்றி இருந்தது. வருடத்தில் பல மாதங்களுக்கு சபை பிரசங்கம் செய்யப்படாமல் மூடப்பட்டிருந்தது. கேரி அவர்களுக்கு உதவ முன் வந்தார். அவருடைய பிரசங்கம் அனைவரையும் கிறிஸ்து


**சான்றோர் சரிதம்**

வுக்குள் ஒன்று சேர்த்தது. கிராமத்து இளைஞர்கள் கர்த்தரை அறிந்து கொள்ளத் தொடங்கினார்கள். சபை மக்கள் கேரி சபைப்போதகராக வரவேண்டும் என்று அவரை வற்புறுத்தத் தொடங்கினார்கள். எதிர்பாராதவிதமாக சபை ஊழியத் திற்கு அழைக்கப்பட்ட கேரி இதைக் குறித்து தனது நண்பரான ஜோன் சட்கிளிப்பிடம் ஆலோசனை கேட்டார். ஊழியத்திற்கான தனது தகுதிபற்றித் தீர்மானிக்கும் அதிகாரத்தையும் சட்கிளிப்பிற்கும், பாப்திஸ்து சபைக் கூட்டத்திற்கும் அளித்தார்.

கேரி நூற்றுக்கு மேலான பாப்திஸ்து சபைப்போதகர்கள் மத்தியில் இருமுறை பிரசங்கம் செய்ய வேண்டி இருந்தது. முதல் தடவை அவர் பிரசங்கித்தபோது போதகர்களுக்கு அவரது பிரசங்கம் பிடிக்கவில்லை. இரண்டாம் தடவை அவர் பேசியபோது மகிழ்ச்சியோடு அவரை ஏற்றுக் கொண்டார்கள். அன்று முதல் வேதத்தைப் பிரசங்கிக்கும் அனுமதி அவருக்கு சபையால் கொடுக்கப்பட்டது. இரண்டு மாதங்கள் தட்டிக்கழித்தபின்பு கேரி மோல்டன் சபைப்போதகராக ஒப்புக் கொண்டார். அதற்காக வருடத்திற்கு அவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் பத்துப் பவுண்கள். அக்கிராமத்தின் வீதித் தொழிலாளியினுடைய சம்பளத்தைவிட அது குறைவானது. ஆனால் அதைத் தங்களுடைய வறுமையையும் மீறிப் பலதுன்பங்களுக்கிடையில் சபை தனக்களித்ததை கேரி உணர்ந்திருந்தார்.

கேரியின் முதலாவது சபை ஊழியம் பல துன்பங்களுக்கு மத்தியில் ஆரம்பமானது. போதக ஊழியத்தில் பெருமதிப்பு வைத்திருந்த அவர், போதகர்கள் பிரசங்க ஊழியத்தை மட்டுமல்லாது, தங்கள் வீட்டையும் சரியாகக்கவனிக்க வேண்டும் என்பதில் பெரும் அக்கறை கொண்டிருந்தார். கிராம மக்கள் அவரது பிரசங்கத்தால் கவரப்பட்டார்கள். அநேக இளம் வாலிபர்கள் அவரது ஊழியத்தின் மூலம் கர்த்தரை அறிந்து கொண்டார்கள். இக்கிராம ஊழியமே அவரது எதிர்காலக் கனவுகளுக்கு ஒருவிதத்தில் ஏணியாக அமைந்தது. கேரி இக்காலங்களில் லத்தீன், எபிரேய மொழிகளைக் கவனத்தோடு கற்கத் தொடங்கினார். அவற்றோடு இத்தாலிய மொழியையும் பின்னால் சேர்த்துக் கொண்டார். எவ்வித சொல்லகராதியோ, இலக்கண நூலோ இல்லாமல் பிரெஞ்சு, டச்சு மொழிகளையும் பயின்றார். எதிர் காலத்தில் இவையெல்லாம் எப்படி உதவப் போகின்றது என்று கேரி அறியாமல் இருந்தபோதும், கர்த்தர் தமது ஊழியனைப் பின்னால் உலகம் வியந்து போற்றப்போகும் பெரும் பணிக்கு இச்சிறு கிராமத்தில் தயார் செய்யத் தொடங்கிவிட்டார். இவ்வாறு பல உலக மொழிகளையும் ஆர்வத்தோடு பயின்றதால் எதிர்காலத்தில் இந்தியாவின் பல மொழிகளையும் பயின்று வேதத்தை அம்மொழிகளில் அவரால் மொழி பெயர்க்க முடிந்தது. (வளரும்)

# வினாவிடை முறையிலமைந்த



# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெயிடில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்தொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மினிஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையையும்', வெஸ்மினிஸ்டர் திருமறைக்கல்வி நூல், பென்ஜமின் கீச்சின் திருமறைக்கல்வி நூல் ஆகியவற்றைத் தழுவிய திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

**கேள்வி 11:** கடவுள் மனிதனை எவ்வாறு படைத்தார்?

கடவுள் மனிதனை தனது சாயலில், ஆணாகவும், பெண்ணாகவும், அறிவு, நீதி, பரிசுத்தம் ஆகியவற்றுடன் சகல படைப்புயிர்களையும் ஆளும்தன்மையுடன் படைத்தார்.

*(ஆதியாகமம் 1:27; கொலோ. 3:10; பிரசங்கி 7:29 எபேசி. 4:24; ஆதியாகமம் 1:28)*

**விளக்கக்குறிப்பு:** கடவுள் மனிதனைத் தனது சாயலில் படைத்தபோது, பாவமற்ற நிலையில் அவன் கடவுளை அறிந்திருந்தான். அறிவு, நீதி, பரிசுத்தம் அனைத்தோடும் கடவுள் மனிதனைப் படைத்தார். பாவமற்ற நிலையில், நீதியுள்ள அவனால் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முடிந்தது. இதையே "அவரது சாயல்" என்ற பதம் விளக்குகின்றது.

**கேள்வி 12:** கடவுளின் பராமரிப்பின் செயல்கள் யாவை?

**பதில்:** மகா பரிசுத்தத்துடனும், ஞானத்துடனும், வல்லமையுடனும் தனது படைப்புயிர்களையும், அவர்களது செயல்களையும் பாதுகாத்து ஆளுவதே கடவுளின் பராமரிப்பின் செயல்களாகும்.

*(சங். 145:17; ஏசாயா 28:29; எபிரே. 1:3; கொலோ. 1:17; சங். 103:19; மத்தேயு 10:2930)*

**விளக்கக்குறிப்பு:** கடவுளின் பராமரிப்பு என்பது, அவர் தான் படைத்த அனைத்தையும் தனது மகிமைக்காகவே பாதுகாத்து ஆளும் தன்மையைக் குறிப்பதாகும். வேதத்தின் அநேக பகுதிகள் இவ்வுண்மையைப் போதிக்கின்றன. (எபேசியர் 1:9-12; சங். 104; மத்தேயு 6:26-29; அப்போஸ். 17:25-28; ரோமர் 8:28; அப்போஸ். 14:17; ரோமர் 1:18-23; 1 கொரி. 15:24)

**கேள்வி 13:** மனிதன் எந்நிலையில் கடவுளால் படைக்கப்பட்டான்?

**பதில்:** பரிசுத்தமும், பாவமுமற்ற நிலையில் மனிதனைக் கடவுள் படைத்து ஏதேன் தோட்டத்தில் இருத்தியதோடு, மரணத்தை உண்டாக்கும் நன்மை, தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்றும் தடை செய்தார்.

*(ஆதி. 2:15; 2:25; பிரசங்கி 7:29; ஆதி. 2:1617)*

**கேள்வி 14:** எமது முதல் பெற்றோர் கடவுளால் படைக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து இருந்தனரா?

**பதில்:** எமது முதல் பெற்றோர் சுயசித்தத்தின்படி செயல்படும் சுதந்திரத்தைப் பெற்றிருந்த நிலையில், கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்து தாங்கள் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்ந்தனர்.

*(ஆதி. 3:6-7; ரோமர் 5:12)*

**கேள்வி 15:** பாவம் என்றால் என்ன?

**பதில்:** கடவுளுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடவாமல் இருப்பதும், அதை மீறுதலுமே பாவமாகும்.

*(1 யோவான் 3:4)*

**விளக்கக்குறிப்பு:** நியாயப்பிரமாணம் என்பது கர்த்தருடைய முழு வார்த்தையும் குறிப்பதாகும். பாவத்தை விளக்குகின்றபோது, இருவகையான பாவத்தைப் பார்க்கிறோம். முதலாவது, வேதத்தின் கட்டளைகளின்படி நடவாமல் இருப்பது பாவம். இதனை ஆங்கிலத்தில் "Sins of Omission" என்று கூறுவார்கள். பாவத்தைக் குறித்து எண்ணுகின்றபோது, அநேகர் இதை நினைத்துப் பார்ப்பதில்லை. இரண்டாவது, கர்த்தருடைய கட்டளைகளை மீறுதலாகும். இதனை ஆங்கிலத்தில் "Sins of commssion" என்று கூறுவார்கள். அநேகர் இதை மட்டுமே பாவமாகத் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பாவம் இவை இரண்டையும் உள்ளடக்கியதாகும்.

**கேள்வி 16:** எமது முதல் பெற்றோர் தாம் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்வதற்குக் காரணமாக இருந்த பாவம் எது?

**பதில்:** கடவுளால் தடைசெய்யப்பட்ட கனியைப் புசித்ததே எமது முதல் பெற்றோர் தாம் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்வதற்குக் காரணமாயிருந்த பாவமாகும்.

*(ஆதி. 3:11-12)*

*கேள்வி 17:* *ஆதாமின் முதல் பாவத்தினால் மனித இனம் அனைத்துமே பாவத்தில் வீழ்ந்ததா?*

*பதில்:* *சந்ததி சந்ததியாக, இயற்கையாக ஆதாமின் வழிவந்த மனித இனம் அனைத்தும், ஆதாமோடிருந்து, அவன் செய்த முதல் பாவத்தைச் செய்து அவனோடு வீழ்ந்தது.*

*(ரோமர் 5:12, 18-19; 1 கொரி. 15:21-22)*

**விளக்கக்குறிப்பு:** ஆதாம் பாவம் செய்தபோது முழு மனித இனமும் அவனோடிணைந்திருந்தது என்பது வேதத்தின் போதனை. ஆதாம்செய்த பாவத்திற்கு நாம் ஏன் துன்பப்பட வேண்டும்? என்பது கிறிஸ்துவை அறியாதவர்கள் கேட்கும் கேள்வி. ஆனால், ஒரு மரத்தின் கிளைகள் அம்மரத்தின் அங்கங்களாக இருப்பதுபோல, ஆதாமோடு நமக்குத் தொடர்பிருக்கின்றது. அதாவது, ஆதாம் நமது பிரதிநிதியாக இருந்து தனது சுயசித்தத்தின் வழிப்படி நடந்து, கர்த்தரின் வார்த்தையை நிராகரித்து, அவருக்கெதிராகப் பாவம் செய்தான். ஆகவே அப்பாவம் நம்மையும் பிடித்துள்ளது. இங்கே "இயற்கையாக" என்ற வார்த்தை, ஆதாமின் பாவத்தின் வாரிசுகளாக நாம் பிறந்திருப்பதை உணர்த்துவதோடு, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து அவ்வழியில், பாவத்தோடு பிறக்கவில்ல என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

*கேள்வி 18:* *பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சி மனித இனத்தை எந்நிலைக்குக் கொண்டு வந்தது?*

*பதில்:* *பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சி மனித இனத்தை பாவத்தன்மைக்கும், அவலநிலைக்கும் உட்படுத்தியது.*

*(சங். 14:3; ஏசாயா 64:6; ஆதி. 3:16-19; ரோமர் 8:20-23)*

*கேள்வி 19:* *மனிதன் வீழ்ந்த நிலையின் பாவத்தன்மை யாது?*

*பதில்:* *ஜென்ம பாவம் என்று அழைக்கப்படுகின்ற, ஆதாமின் முதல் பாவத்தினால் ஏற்பட்ட குற்ற உணர்வு, நீதியற்ற தன்மை, முழுமையாகக் கறைபட்ட தன்மை அத்தோடு, இதன் மூலமாகத் தொடர்ந்து வரும் அனைத்துப் பாவங்களையும் உள்ளடக்கியதே மனிதன் வீழ்ந்த நிலையின் பாவத்தன்மை.*

*ரோமர் 5:19; 3:10; எபே. 2:1-3; சங். 51:5; மத்தேயு 15:19-20)*

**விளக்கக்குறிப்பு:** முதலாவதாக ஆதாமின் முதல் பாவத்தினால் ஏற்பட்ட நீதியற்ற தன்மை, ஆதாம் பாவமற்று இருந்த நிலையை இழந்து போனதைக் குறிக்கின்றது. ஆதலால் ஆதாமின் வழித்தோன்றல்களும், ஆதாமைப்போலவே பாவத்தினால் நீதியற்றவர்களாக உள்ளார்கள். பாவத்தினால் மனிதன் எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டான் என்பதில் பலருக்கும் கருத்து வேறுபாடு உண்டு. மனிதன் பாவத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டான் (Totally depraved) என்று வேதம் கூறுகின்றது. ஆதியாகமம் 6:5 இன்படி மனிதனுடைய இருதயத்தின் சிந்தனைகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதவைகள். அதாவது மனிதனுடைய சிந்தனையில் கேடானதைத் தவிர வேறு எதற்கும் எப்போதுமே இடமில்லை. இவ்வாறாகப் பாவம் மனிதனின் எல்லா உறுப்புகளையும், அங்கங்களையும், கொடிய வியாதியைப்போலப் பாதித்துள்ளது. ஆகவேதான் பரிசுத்த ஆவியின் கிரியையினாலல்லாமல் மனிதன் தனது சுய வல்லமையினாலும், சித்தத்தின் செயற்பாட்டாலும் கடவுளை அறிந்து கொள்ள முடியாது.

இவ்வுண்மையைச் சிலர் தீவிரமாக எதிர்ப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரை இது மனிதனை எதுவும் செய்யவியலாத அடிமையாகக் காட்டுகின்றது. இவர்கள் "சுதந்திரத்திற்கும்" "வல்லமைக்கும்" வித்தியாசம் தெரியாமல் மனதைக் குழப்பிக் கொள்கிறார்கள். இவை இரண்டும் ஒன்று போல் தோற்றமளித்தாலும் அவை ஒன்றல்ல. ஒரு மனிதன் தான் விரும்பியதைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் அவனுக்குச் சுதந்திரம் இருப்பதாகச் சொல்லலாம். ஆனால் மனிதனால் தான் விரும்பியதை எப்போதுமே செய்ய முடியாமலிருக்கின்றது. உதாரணமாக, ஒரு மனிதன் விண்ணில் பறப்பதற்கு சுதந்திரமுண்டு. ஆனால் அவனுக்குப் பறப்பதற்கு சுதந்திரம் இருந்தபோதும் வல்லமையில்லை. அதேபோல்தான் மனிதன் நன்மை செய்வதற்கு எல்லாச் சுதந்திரமும் உண்டு, ஆனால் அவனால் நன்மை செய்யமுடியாமல் இருக்கின்றது. ஏனெனில் அவனுக்கு நன்மை செய்யும் வல்லமை இல்லை. பாவத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு வல்லமை இழந்து நிற்கிறான் மனிதன்.

> **"இத் திருமறைக் கல்வியை வேதபாட வகுப்புகளிலோ, ஞாயிறு பாடசாலைகளிலோ முறையாகப் போதிப்பது சபைமக்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான வேத அறிவு பெற்று வளரத் துணைபுரிவதாக அமையும்."**

*கேள்வி 20:* *மனிதன் வீழ்ச்சியுற்ற நிலையின் அவலம் யாது?*

*பதில்:* *முழு மனித இனமும் வீழ்ச்சியினால் கடவுளோடிருந்த ஐக்கியத்தை இழந்து, அவரது கோபத்தையும், சாபத்தையும் சுமந்து, இவ்வுலக வாழ்க்கையின் சகல அவலங்களையும், இறப்பையும், நித்தியமாக நரகத்தின் துன்பங்களையும் அனுபவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.*

*(ஆதியாகமம் 3:24; ஏசாயா 59:2; எபே. 2:3; ரோமர் 6:23; மத்தேயு 25:41)*

**விளக்கக்குறிப்பு:** கடவுள் மனிதனைப் படைத்தபோது அவனை நித்திய ஜீவனை அனுபவிக்கும் தன்மையோடு படைத்தார். மனிதன் பாவத்தால் கடவுளோடிருந்த ஐக்கியத்தை இழந்து நிற்பதால் அவனுடைய வாழ்க்கை இப்பொழுது வெறுமையாக சமாதானமற்று உள்ளது (பிரசங்கி 1:2). அவ்வெறுமையைத் தேவகுமாரனாகிய இயேசு ஒருவரே நிரப்பக்கூடியவராக இருக்கிறார். அத்தோடு இவ்வுலக வாழ்க்கையில் மனிதன் பலவித அவலங்களையும் அனுபவிக்க வேண்டியதாக உள்ளது (யோபு 5:7). இவ்வவலங்களில் ஒன்றாக இறப்பும் அமைந்துள்ளது.

பாவத்தின் காரணமாக மனிதன் நரகத்தின் நித்திய துன்பத்தையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. இதை இன்று "வேத வல்லுனர்கள்" என்று பலராலும் கருதப்படுகிறவர்களும் மறுக்கிறார்கள். கிறிஸ்து இந்நித்திய துன்பத்தை "அவியாத அக்கினி" (மத்தேயு 3:12; மாற்கு 9:48) என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்துவே, பாவிகள் நித்திய ஆக்கினையை அடைவார்கள் என்றும் நீதிமான்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் என்றும் போதித்தார் (மத்தேயு 25:46). இவ்வுண்மையை மறுக்கிறவர்கள் வேதத்தை விசுவாசிப்பவர்களல்ல. கடைசிக்காலங்களில் சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று வேதம் சுட்டிக்காட்டுகின்றது.


## திருமறைத்தீபம்

*'திருமறைத்தீபம்' சவரின் கிரேஸ் சபையால் (**Sovereign Grace Church, Auckland, New Zealand**) வெளியிடப்படும் காலாண்டுப்பத்திரிகை. ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்கள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.*



*ஆசிரியர்: R. பாலா* *தொலைபேசி எண்: (09) 527 1522*

The Bible Lamp,
P. O. Box 62-159, Sylvia Park, Auckland, New Zealand

# கிருபையின் போதனைகள் என்றால் என்ன?

சத்தியத்திற்கு எதிரான போலிப்போதனைகளை எவ்வளவு தூரம் நாம் எதிர்த்துப் போரிட்டாலும் அவை காளான்களைப்போல் தொடர்ந்து தலையெடுக்கும் என்பது வரலாறு கண்ட உண்மை. பெலேஜியஸினால் உயிர்கொடுக்கப் பட்ட, சத்தியத்திற்கு முரணான போலிப்போதனை அவனோடு அழிந்து விடாது மீண்டும் உயிர்த்தெழ சமயம் பார்த்துக் காத்திருந்தது. பெலேஜியஸினுடைய போதனைகள் 'செமி-பெலேஜியனிசம்' (*Semi-Pelagianism*) என்ற பெயரில் மறு உருவம் எடுத்தது. இது ஆகஸ்தீனுடைய போதனைகளுக்கும், பெலேஜியஸினுடைய போதனைகளுக்கும் இடைப்பட்ட ஒரு போதனையை அறிமுகப்படுத்தியது. இப்போதனை, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளான மறுபிறப்பை, அவன் கிறிஸ்துவை விசுவாசித்து எடுக்கும் தீர்மானமும், கர்த்தருடைய கிருபையும் சந்திக்கும் போது அடைகிறான் என்று விளக்கியது. மனிதன் பாவத்தினால் கறைபடிந்திருப்பதை, இப்போதனை மறுக்காவிட்டாலும், ஆதாமின் பாவத்தினால் மனிதன் முழுமையாக வீழ்ச்சியடையாமல் பலவீனமடைந்தவனாக மட்டுமே இருக்கிறான் என்று வாதிடுகிறது. அதாவது அவன் பாவத்தினால் பாதிக்கப்பட்டு பலவீனமுற்றபோதும், அவனுடைய சித்தம் எந்தவிதத்திலும் சுதந்திரமாக செயல்படும் தன்மையை இழக்காமல் உள்ளது. ஆகவே பலவீனமடைந்துள்ள மனிதனின் சித்தம் சகல சுதந்திரத்துடன், தேவகிருபையோடு சரிசமமாகக் கூட்டாகச் செயல்படுகின்றபோது மனிதன் மறு பிறப்பு அடைகிறான் என்பது 'செமி-பெலேஜியனிசத்தின்' வாதம். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது எந்தவித ஆபத்தும் இல்லாத ஒரு போதனையாக இது தென்பட்டாலும், உண்மையில் மனிதன் மறுபிறப்பு அடைவதற்கு அவனையே இப்போதனை பொறுப்பாளியாக்குகின்றது. அதுமட்டுமல்லாது தேவ கிருபை எல்லா மனிதர்களுக்கும் சொந்தமானது என்றும் அதை அடையும் வல்லமை மனிதனுடைய சுதந்திரமான சித்தத்தையே சார்ந்துள்ளது என்றும் இப்போதனை கூறுகின்றது. "கடவுளை விசுவாசிக்க சித்தங்கொள்ள வேண்டியவன் நான்; அதற்குத்துணையாயிருப்பது மட்டுமே தேவகிருபையின் கடமை" என்று வாதிட்டது இப்போதனை.

பெலேஜியனிசம், செமி-பெலேஜியனிசம் ஆகிய இரு போதனைகளுமே பாவத்தைக்குறித்த வேதத்தின் போதனையை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. மனிதன் முழுமையாகவே பாவத்தால் பாதிக்கப்பட்டதால் அவனது சகல பாகங்களும், சித்தம் உட்பட அப்பாவத்தால் கறைபடிந்துள்ளது என்பது வேதத்தின் போதனை. மேற்கூறிய இரண்டு போதனைகளுமே இதை எதிர்த்து, ஆதாமிற்குப் பின்வந்த மனிதனின் இப்போதைய நிலைக்கு வித்தியாசமான விளக்கம் கொடுக்க முனைகின்றன. 'செமி-பெலேஜியனிசத்தை' மார்சீலியா என்ற இடத்தைச் சேர்ந்த 'கேசியன்' என்பவன் தோற்றுவித்தான். திருச்சபை A. D. 529 இல் கூடி (*Synod of Orange*) 'செமி-பெலேஜியனிசத்தை' வேதத்திற்குப் புறம்பான போதனை என்று நிராகரித்தது.

**'கிருபையின் போதனைகள்' என்ற சொற்றொடர் பலருக்குப் புதிதாக இருக்கலாம். சிலர் அது குறித்துக் கேள்விப்பட்டிருக்கலாம். மேலும் சிலர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தும், அதில் தெளிவில்லாது இருக்கலாம். இக்கட்டுரை இப்போதனைகளை திருமறையின் அடிப்படையில் சரித்திர பூர்வமாக ஆராய்ந்து அறிமுகப்படுத்துகிறது.**

**அரங்கம் - 3**

வேதவல்லுனரான வில்லியம் கண்ணிங்கத்தின் (*William Cunningham*) வார்த்தைகள் பெலேஜியனிசம், செமி-பெலேஜியனிசம் ஆகிய போதனைகளினால் ஏற்படும் ஆபத்தை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. "ஒரு தனிமனிதனுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சியோ பாதிப்போ, மனிதனுடைய படைப்பு, வீழ்ச்சி ஆகியவை பற்றிய வேதசத்தியங்களில் அவன் கொண்டுள்ள கருத்துக்களிலேயே பெரிதும் தங்கியுள்ளது என்பதை திருச்சபை வரலாறு தெளிவாகக் காட்டுகின்றது" என்று அவர் குறிப்பிட்டார். இன்று பிச்சைக்காரர்களைப்போலக் கெஞ்சிப் பலரிடத்தில் நற்செய்தியைக் கொடுக்க முனையும் கூட்டத்துக்கும், 'கிறிஸ்துவிற்காகத் தீர்மானம் எடு' 'கரங்களை உயர்த்திக் கர்த்தரை ஏற்றுக்கொள்' என்றெல்லாம் வேதத்தில் இல்லாத வெறும் வார்த்தைகளைக் கூறி கிறிஸ்துவை விலைபேசுபவர்களின் செயல்களுக்கும், கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு மனந்திரும்புதல் அவசியமில்லை (*Charles Ryrie and Zane Hodge*[1]) என்று கூறுமளவுக்கு சிலருடைய ஊழியம் போய்விட்டதற்கும், நாம் மேலே குறிப்பிட்ட போலிப் போதனைகள்தான் காரணம். ஏனெனில் இவர்கள் மனிதன் பாவத்தால் எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளான் என்று திருமறை தெரிவிக்கும் உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தது மட்டுமல்லாமல் தாமே மனிதனைப் பற்றிய சொந்தக் கருத்துக்களை பெலேஜியனிசத்தின் அடிப்படையில் உருவாக்கிக் கொண்டுள்ளார்கள்.

இதே பெலேஜியனிசம், செமி-பெலேஜியனிசம் என்பவற்றின் அடிப்படையில்தான் பின்பு 'ஆர்மீனியனிசம்' உருவாகி A. D. 1659 இல் திருச்சபையினால் போலிப் போதனையாக இனங்காணப்பட்டு (*Synod of Dort*) நிராகரிக்கப்பட்டது. இப்போதனையும், மனிதன் மறுபிறப்பு அடைவதற்கு தன்னிலேயே தங்கியிருக்கிறான் என்றும், விசுவாசம் தேவனால் கொடுக்கப்படுவதல்ல, அவருடைய துணையில்லாமல் மனிதன் தானே செய்கின்ற செயல் என்றும் போதிக்கின்றது. இப்போதனையும் பாவம், மனிதனின் வீழ்ச்சி ஆகியவற்றைப் பற்றிய திருமறையின் போதனைகளைத் தவறாகப்புரிந்து கொண்டு அதற்குப் புதுவிளக்கம் கொடுக்க முற்படுகிறது. இன்று உலகம் முழுதும் இப்போதனை திருச்சபைகள் மத்தியில் பரவி பலரையும் தனக்கு அடிமைகளாக்கி வைத்திருக்கின்றது. இப்போதனைகளின் செல்வாக்கிற்குத் தப்பாத சமயக்குழுக்களே (*Denominations*) இல்லை எனலாம். இதன் காரணமாகத்தான் கிறிஸ்தவர்கள் இன்று கிருபையின் போதனைகளை அறியாத ஒரு மயக்கத்தில் இருக்கிறார்கள்.

**([1] 'சார்ள்ஸ் ரைரியும், ஹொட்ஜும் அமெரிக்க டல்லாஸ் வேதாகமக் கல்லூரியின் பேராசிரியர்கள்.)**

(வளரும்)

# அன்புள்ள . . .



# அருளுரையாளனுக்கு!

பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள் பண்பறிந்த நம் பெரியோர்கள். அதில் பொதிந்துள்ள உண்மைகள்தான் எத்தனை! அருளுரையாளன் ஒருவனைப்போல, அவனது சக ஊழியனைக் கர்த்தருக்கு அடுத்தபடியாக சரிவரப் புரிந்து கொள்ளக்கூடிய வேறொருவர் இருக்க முடியாது. அவனது இன்ப, துன்பங்கள், ஊழியப் பொறுப்புகள், அதிலேற்படும் இடர்கள் அனைத்தையும் அவனொருவனே அனுபவபூர்வமாக உணர்ந்தவன். ஆகவே, சபைப்போதகனான நான் தாழ்மையோடு எனது சக ஊழியர்களுடன் இவ்வூழியம் பற்றிய சில உண்மைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நமக்களிக்கப்பட்டிருக்கும் ஊழியம் மிகப் பொறுப்புள்ள ஊழியம் என்பதில் எவருக்கும் எள்ளளவும் சந்தேகமிருக்காது. ஒரு நிறுவனத்தில் ஒருவன் ஆசையுடன் விரும்பித் தேடிக்கொள்ளும் உத்தியோகத்தைப் போன்றதொன்றதன்று இவ்வூழியம். தேவனுடைய ஆடுகளை நம் பொறுப்பிலுள்ளவரை, இம்மியளவும் தவறாது கவனிக்க, அவரது விசேட அழைப்பின்மூலம் அழைக்கப்பட்டு, அவரது ஆடுகளால் அங்கீகரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ள ஊழியம் இது. அதேவேளை, இவ்வூழியத்தைக் கொண்டு செல்லத் தேவையான தகுதிகளும், வரங்களும் நம்மோடிருக்கும்வரை மட்டுமே நாம் இதில் நிலைத்திருக்க முடியும்; மற்றவர்களுக்கு பயன்படவும் முடியும். அத்தோடு நமக்குத் தேவை கர்த்தருடைய அளவற்ற ஆசீர்வாதம். சொந்த ஆசாபாசங்கள் எல்லாவற்றையும் துறந்து, தன்னலமாகிய குள்ளநரியை ஆழ்குழிக்குள் புதைத்து, அவரது மகிமையை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நடத்த வேண்டிய ஊழியம் அருளுரையாளனின் ஊழியம்.

இவ் ஊழியத்தைப் பயன்படுத்தி உடலை வளர்ப்பதோ, மனைவிமக்களுக்கு சுகபோகத்தை அளிப்பதோ, சபையைப் பயன்படுத்தி சர்வாதிகாரம் செய்வதோ அருளுரையாளனுக்கு அடுக்காத செயல். ஆடுகளுக்கு அன்றாடம் உணவூட்டி, அவர்கள் வாழும் நிலைக்கேற்ப நித்தமும் வாழ்ந்து, அவர் அகற்றினாலன்றி அகலமாட்டேன் என்று, அன்பர் இயேசுவிலேயே நிலைநின்று, சபை வளர்ச்சிக்குப் பாடு படுபவனே சத்திய வசனமெடுத்துரைக்கும் அருளுரையாளன்.

திருமறையை மட்டுமே தெய்வ வாக்காகக் கொண்டு, பட்டங்களுக்காகப் பல்லிளித்து அலையாது, கட்டுப்பாட்டுடன் கர்த்தரையே நம்பி, தெட்டத் தெளிவாக திருமறையின் போதனைகளில் திறன் பெற்று, அதைத் தெளிவாக எடுத்துரைப்பவனே தேர்ந்த நல்லருளுரையாளன். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய், நாற்புறமிருந்தும் போலிப் போதனைகள், நாகம்போல் சீறி நம்மை நாசப்படுத்தமுனையும் இந்நாட்களில், நீசத்தனத்திற்கெல்லாம் நெஞ்சிலிடம் கொடாது, நேர்மையுடன் வேதத்தை நேர்த்தியாய்ப் போதிப்பவனே நெஞ்சுரமுள்ள அருளுரையாளன்.

காதுக்கினிய பாடல்கள் வேண்டும், கண்களுக்கு விருந்தளிக்கும் காட்சிகளும் வேண்டும், ஆட்டம், கூத்து, வில்லுப்பாட்டுக்கள் வேண்டும், அந்நிய பாஷை, அற்புதங்கள் காண வேண்டும் என்று பலரும் திருச்சபைகளில் அலைந்து திரியும் இந்நாட்களில், ஆராதனைக் கூட்டங்களைத் திருவசனத்தின்படி, இறைபக்தியும், இறை ஏற்றமுமே குறிக்கோளாகக் கொண்டு, இறை மகிமைக்காகவே நடத்துவான் இயேசுவினருளுரையாளன். நாலுபேரிடம் நல்ல பேர் வாங்க வேண்டும் என்று, கேட்பவர் உளம் களிப்படையும் விதத்தில் வேதத்தைத் தலைகீழாய் மாற்றி வீணுரையாற்றும் எத்தர்கள் பலர் உலவும் வித்தியாசமான இவ்வுலகில், சத்தியத்தைத் தவிர வேறெதனையும் எடுத்துரையான் சீர்திருத்த அருளுரையாளன்.

கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் மலிந்த இந்நாட்களில், “வேலியே பயிரை மேய்வதுபோல்”, கள்ளமறியா வெள்ளாட்டுக் குட்டிகள் போன்ற சபை மக்களைச் சுரண்டி வாழும் சிலர், ‘போதகர்’ என்ற போர்வைக்குள் மறைந்து புரட்டுகள் செய்கின்றவேளையில், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, நித்தமும் தம் மக்களின் தேவைகள் அறிந்து நேர்த்தியாய் அவற்றைப் பூர்த்தி செய்வான் செயல் வீரனான கிறிஸ்தவ அருளுரையாளன். குடியைக் கெடுக்கும் கேடான உலக ஆசைகள் மூலம், சூனியக்காரனான சாத்தான் தன்னை சூழ்ச்சியின் மூலம் சோதிக்கும் போதெல்லாம், உடலை வருத்தி, ஜெபத்தில் தரித்து நின்று, கர்த்தரைத் தியானித்துத் தன்னைக்காத்துக் கொள்வான் எங்கள் அருளுரையாளன். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசான்; உண்மையை உள்ளபடி ஊக்கத்தோடெடுத்துரைப்பான். ஊழியத்திற்காக ஊதியம் பெற்றாலும், ஊதியத்திற்காக ஊழியம் செய்யான். திருமறையை மட்டுமே தினமும் படித்து, தேவன் வழிப்படித் திட்டமாய் வாழ்வான் தீங்கென்பது அறியாத அருளுரையாளன்.

சத்தியத்திற்கெதிராய், சபைமக்களுக்கெதிரியாய், சற்குணங்கள் அற்று, சர்ப்பங்கள்போல் உலவிவரும், போலிப்போதகர்கள், ஊழியக்காரர்கள் ஊரெங்கும் நடமாடும் வேளையில், திருமறைக்கு அடிபணிந்து, உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஊழியத்திற்கே அர்ப்பணித்து, சபைநலன் ஒன்றையே வாழ்வில் குறிக்கோளாகக்கொண்டு, தாழ்மையுணர்வு, தியாகமனப்பான்மை, நல்லொழுக்கம், நீதி, நேர்மை, ஆகிய அனைத்தும் அமையப்பெற்று, இயேசுவின் மேல் கொண்ட நேசத்தின் காரணமாய் நித்தமும் ஊழியம் செய்கின்றேனா என்று, நிச்சயம் இன்று நீங்கள் கேட்கத்தான் வேண்டும், நேர்மையுள்ள ஊழியக்காரராய் இருந்தால்.

நிச்சயமாய் மீண்டும் வருவேன் என்று சத்தியமாய் சொல்லிச் சென்ற எம் இயேசுபிரானின், குற்ற விசாரணைக் குத்தப்பி, உத்தமன், நெஞ்சுரத்தோடு ஊக்கமுற உழைத்தான், பாவத்திற்கஞ்சி தெய்வபயத்தோடு பிரசங்கித்தான் என்ற நல்ல பெயரை, இன்றும் என்றும் மாறாத இறைமகன் இயேசு விடமிருந்து பெற இன்று முதல் நீங்கள் உழைப்பீர்களா?



பத்திரிகையின் வடிவமைப்புக் கண்டு உங்களைப் பாராட்டுகிறேன். இதழின் கருத்துக்கள் தெளிவாகவும், வேத ஆதாரபூர்வமாகவும் இருப்பதைக் கண்டு நம் விசுவாசிகள், ஊழியர்கள் பாராட்டுகிறார்கள். கிருபையின் கோட்பாடுகளைத் தெளிவாக விளக்கும் இத்தகைய பத்திரிகை நம் சபைகளுக்கு மிக மிக அவசியம்.

*போதகர் சாம் தேவநேசன், சென்னை*

திருமறைத்தீபம் செய்தியிலும், அச்சுப்பணியிலும் சிறப்பாக இருக்கின்றது. 'கிறிஸ்தவமும், திராவிட சமயங்களும்' என்ற தலைப்பின் கீழ் நீங்கள் எழுதியிருந்ததை நான் பாராட்டுகிறேன்.

*போதகர் டேவிட் தனராஜ், சென்னை*

திராவிட சமயக்கருத்துக்களில் மூழ்கிக்கிடந்த என்னை உங்கள் 'கிறிஸ்தவமும், திராவிட சமயங்களும்' என்ற தலைப்பு அசைத்தது. என்னைப் பொறுத்தவரையில் என் இயேசு கிறிஸ்துவைத்தவிர வேறு ஒரு சுவிசேசத்தை இன்றிலிருந்து நான் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

*பி. பி. எஸ். ராஜ், சென்னை*

திருமறைத்தீபம் படித்துப்பயனடைந்தேன். அந்நியபாஷை, திராவிட சமயங்கள் பற்றி நீங்கள் அளித்த விளக்கங்கள் பயனுடையதாகவும், சிந்தையைத் தூண்டுவதாகவும் இருந்தன. என் சபை மக்களுக்கும், எனது ஊழியத்திற்கும் பத்திரிகை உதவியாக இருக்கும். தொடர்ந்து அனுப்புங்கள்.

*பாஸ்டர் எஸ். ஜோன் டேவிட் சாமுவேல், பம்பாய்*

திருமறைத்தீபம், 'எயிட்ஸ்' நோய் போல மிக வேகமாகப் பரவி வரும் 'பெந்தகொஸ்தே' போதனைகளைத்தடுக்க தமிழகத்திற்கு அனுப்பப்பட்ட ஏவுகணை என்று விசுவாசிக்கிறேன். இப்பத்திரிகை ஊழியம் தொடர நான் ஜெபிக்கிறேன்.

*போதகர் பாண்டியன், சென்னை*

பத்திரிகையில் வரும் கட்டுரைகள் அருமையாக உள்ளன. கேள்வி பதில் பகுதி நன்றாக உள்ளது. 'கெரிஸ்மெட்டிக் இயக்கம்' தொடர்பான கட்டுரைகள் எமது சபை மக்களுக்கு உதவியாக உள்ளன. இவ்வூழியத்தை நீங்கள் ஊக்கத்துடன் நடத்த ஜெபிக்கிறேன்.

*போதகர் முரளீதரன், இலங்கை*

'திருமறைத்தீபம்' இதழ் பெற்றுக் கொண்டேன். படித்துப் பயனடைந்தேன். தமிழ்நாட்டில் 'கெரிஸ்மெட்டிக்' இயக்கம் காட்டுத்தீ போல் பரவியிருக்கிறது. இவ்வியக்கத்தை முறியடிக்க திருமறைத்தீபம் பேருதவியாக இருக்கும்.

*டாக்டர் செல்வின் ஜெபராஜ் நோர்மன், கோவை*

திருமறைத்தீபம் வாசித்தேன். மிக நன்றாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தது. தொடர்ந்து அனுப்புங்கள். இவ்வூழியம் முன்னேற ஜெபிக்கிறேன்.

*டீ. ஐ. இன்பநாதன், இலங்கை*

பத்திரிகை கிடைத்தது. நன்றி. தொடர்ந்து அனுப்புங்கள். இவ்வூழியத்திற்காக ஜெபிக்கிறேன்.

*பாஸ்டர் என். அமிர்தலிங்கம், இலங்கை*

சஞ்சிகை கிடைக்கப் பெற்றோம். மிகவும் அழகாகவும், ஒழுங்கான அமைப்பிலும், கவர்ச்சிகரமான முறையிலும் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சி. விடயங்களும் தரமாக இருந்தன.

*சி. பி. சத்தியநாதன்,*
*இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி, இலங்கை*

பத்திரிகையைத் தொடர்ந்து நேரடியாகக் கிடைக்கும்படி அனுப்புங்கள். சத்தியங்களை ஒழுங்காகக் கற்றுக்கொள்ள அது உதவும்.

*ஞானப்பிரகாசம், மதுரை*


## ஆசிரியரெழுதிய சில நூல்கள்

### 1. திருமறை (20 பக்கங்கள்)


*திருமறையின் அதிகாரத்திற்கு பலரும் உட்பட மறுக்கும் இக்காலத்தில், நாம் விசுவாசிக்க வேண்டிய அதன் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் இந்நூல் விளக்குகிறது.*

### 2. ஆன்மீகக் குழப்பம் (20 பக்கங்கள்)

*இன்று சுற்றிவரக் கிறிஸ்தவர்கள் மத்தியில் பார்ப்பது எழுப்புதலா? இல்லை ஆன்மீகக் குழப்பமா? என்பதை வேதபூர்வமாக ஆராய்கின்றது இந்நூல்.*

### 3. திருமறையா? திராவிட சமயமா? (28 பக்கங்கள்)

*கிறிஸ்தவத்திலிருந்துதான் ஆதித்திராவிட சமயங்கள் தோன்றின என்ற தவறான போதனையைப் பரப்பிவருபவர்களின் வாதங்களைத் திருமறையின் அடிப்படையில் ஆராய்கிறது இந்நூல்.*




இலங்கை வாசகர்கள் எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:
**T.B.Surendren, 19.Rajasinghe Road, Colombo-6 Sri Lanka (Price Rs.10.00 each including postage)**
ஏனைய நாடுகளில் உள்ளோர் ஆசிரியருக்கே நேரடியாக எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

# கேள்வி? - பதில்!



*இச்சஞ்சிகை ஆசிரியரிடம் பொதுவாகக் கூட்டங்களில் பலர் கேட்ட முக்கியமான கேள்விகளையும் பதிலையும் ஏனையோரது பயன்கருதி இப்பகுதியில் வெளியிடுகிறோம்.*

## கடவுள் ஒருவனை முன்குறிக்காவிட்டால்.....

**○ *கடவுள் ஒருவனை முன்குறிக்காவிட்டால் அவன் இரட்சிக்கப்படமாட்டான் என்பது சரியா? அவன் இரட்சிக்கப்படுவதற்கோ, இரட்சிக்கப்படாததற்கோ யார் பொறுப்பு?***

✱ பல்லாண்டுகாலமாக கிறிஸ்தவர்கள் கேட்டு வரும் கேள்வி இது. இதற்கு விடை தேடி நாம் வேறெங்கும் போகத்தேவையில்லை. வேதம் இதற்கான பதிலைத் தெளிவாகத் தருகின்றது. முதலாவது நாம் முன்குறித்தல் என்றால் என்னவென்று அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அநேகர் இதைக்குறித்து தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளனர். இதனை ஆங்கிலத்தில் (*Predestination*) என்று சொல்வார்கள். அதாவது ஏற்கனவே, முன்கூட்டியே ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தீர்மானிக்கப்பட்டவர்கள், முன்குறிக்கப்பட்டவர்கள் என்று இதற்குப் பொருள். முன்குறித்தல், கடவுளின் வல்லமையையும், ஞானத்தையும், திட்டத்தையும் எடுத்துக்கூறும் அவரது தெய்வீகச் செயல். உலகத்தோற்றத்திற்கு முன்பே, தான் படைத்த மக்களின் ஒரு பகுதியினரை இயேசுவுக்குள்ளான இரட்சிப்பைப் பெற்றுத் தமது சுவீகாரப் புத்திரர்களாக இருக்கும்படியாக கடவுள் தெரிந்து கொண்டார் என்பதே முன்குறித்தலின் உண்மையாகும் (எபேசியர் 1). இவ்வாறாகத் தெரிந்து கொண்டது மட்டுமல்லாமல் அவர்களைப் பாவத்திலிருந்து விடுவிக்கத் தமது ஒரே குமாரனையும் கடவுள் சிலுவையில் பலிகொடுத்தார் என்று அறிவிக்கின்றது திருமறை. இயேசுவும், தனது தகப்பனால் தம்மிடம் கொடுக்கப்பட்ட ஒருவரையும் தாம் இழந்து போகமாட்டேன் என்று கூறியுள்ளார் (யோவான் 10:28-29). கடவுளின் முன்குறித்தலைக்குறித்து நிராகரிக்க முடியாதளவுக்கு வேத ஆதாரங்கள் மலிந்து காணப்படுகின்றன.

ஆனால், இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளைப் பற்றிப் பேசும்போது, கடவுளால் முன் குறிக்கப்படாவிட்டால் ஒருவன் இரட்சிப்பை அடைய மாட்டான் என்று வாதம் செய்வது தவறு. இரட்சிப்பை அடையும் வழியைப்பற்றித் திருமறை போதிக்கும்போது, ஒருவன் மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்றுதான் சொல்கிறதே தவிர, அவன் ஏற்கனவே முன் குறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று போதிப்பதில்லை. உண்மையில் இரட்சிப்பை அடையும் ஒருவன் நிச்சயமாக கடவுளால் முன்குறிக்கப்பட்டவன் என்பதில் எந்தளவும் சந்தேகமில்லை. ஆனால், இரட்சிப்பை அடைவதற்கு முன்குறிக்கப்படுதல் அல்ல, மனந்திரும்புதலும், விசுவாசமும் மட்டுமே ஒருவனிடமிருந்து எதிர்பார்க்கப் படுகின்றது (மாற்கு 1:15; 16:16; யோவான் 3:18; 3:36; 12:46). இரட்சிப்பை அடையும் ஒருவன் தான் ஏற்கனவே கடவுளால் முன்குறிக்கப்பட்டிருக்கும் திருமறை கூறும் சத்தியத்தை உணர்ந்துகொள்கிறான்.

ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கோ, இரட்சிக்கப் படாததற்கோ மனிதனையே பொறுப்பாளியாகத் திருமறை காண்கிறது (யோவான் 3:18). இரட்சிப்பு ஒருபோதுமே மனிதனுடைய செயல்களில் தங்கியிருப்ப தில்லை. அது தேவனால் மனிதனுக்கு வழங்கப்படும் ஈவாக இருக்கின்றது. அதேவேளை, மனிதன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, பாவநிவாரணரான தேவகுமாரனை விசுவாசிக்காவிட்டால் இரட்சிப்பை அவன் அடைய முடியாது என்று வேதம் உறுதியாகப் போதிக்கின்றது.

**○ *பரிசுத்தமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு அந்நிய பாஷை அவசியமா?***

✱ இரண்டு முக்கிய உண்மைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக, பரிசுத்தமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு அந்நிய பாஷை அவசியம் என்று வேதம் எங்குமே போதிக்கவில்லை. திருமறையின் தெளிவான போதனையின்படி ஒருவருக்குக் கொடுக்கப் படும் எந்த ஒரு ஆவியின் வரமும் எப்போதுமே அவருடைய கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சிக்கு உதவாது. ஏனெனில் ஆவியின் வரங்கள் சபை வளர்ச்சிக்குத்தான் கொடுக்கப்படுகின்றதே தவிர தனியொருவரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக அல்ல (1 கொரி. 12). மத்தேயு 7 ஆம் அதிகாரம் 21-23 வரையிலான வசனங்கள், ஒருவர் பல அற்புதமான காரியங்களைத்தன் வாழ்வில் செய்யக் கூடியவராக இருந்தும் ஆண்டவரை அறியாது இருக்கலாம் என்று போதிக்கின்றது.

இரண்டாவதாக, அந்நிய பாஷையைப் பொறுத்தவரை அது வேதம் முழுமையாகக் கொடுக்கப் படுவதற்கு முன்பு நற்செய்தியை உறுதிப்படுத்துவதற் காகவும், கிறிஸ்துவால் ஏற்படுத்தப்படும் திருச்சபை வளர்ச்சிக்காகவும் அப்போஸ்தலருடைய காலத்தில் கொடுக் கப்பட்டது. அதுவும் பெந்தகொஸ்தே நாளுக்குப் பின்பு அந்நிய பாஷை உட்பட பெரும்பாலான அற்புத வரங்கள் அப்போஸ்தலரால் கரம் வைத்தே மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இன்று வேதம் முழுமையாக நம்மிடம் இருப்பதாலும், அப்போஸ்தலர் நம்மத்தியில் இல்லாத தாலும், தொடர்ந்து அப்போஸ்தலரைக் கர்த்தர் நியமிக்காத தாலும் அத்தகைய வரங்களை நாம் பெற முடியாது. கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் வளர்ச்சி யடைவதற்கும், திருச்சபை வளர்ச்சிக்கும் இன்று நமக்குத் தேவை அந்நிய பாஷை அல்ல, வேதத்தில் தெளிவான அறிவும், அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் தாழ்மை உணர்வும்தான்.

# சிரிக்க வைக்கும் சிரிப்பலைகள்!

கடந்த இதழில் 'கெரிஸ்மெட்டிக்' இயக்கத்தில் இன்று புதிதாக எழுப்புதல் என்ற பெயரில் எழுந்துள்ள 'சிரிப்பலைகள்' (*Laughing revival*) பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். 'கெரிஸ்மெட்டிக்' கூட்டத்தாரிடம் இது ஒரு புதுப் பிரச்சனையைக் கிளப்பி விட்டிருக்கிறது. இவ்வியக்கத்தைச் சேர்ந்த சிலருக்கு இது ஆவியின் செயலாகத் தெரியவில்லை. நிச்சயமாக ஆவியானவர் நம்மை சிரிக்கவும் குரங்கைப் போலவும், நாயைப் போலவும் ஊளையிட வைக்க மாட்டார் என்று இவர்கள் நம்புகிறார்கள். சிரிப்பலைகள் வெறும் கோமாளித்தனம் என்பது இவர்களுடைய நம்பிக்கை. ஆகவே இதை இவர்கள் முற்றாக நிராகரித்து வருகிறார்கள். இத்தோடு போதும் இந்த இயக்கம் என்று மனந்திருந்தி அதைவிட்டு விலகியோடிவிட்டவர்களும் பலர். ஆனால் இயக்கத்தில் இருந்து கொண்டே இந்தப் புதிய சிரிப்பலைக் கோமாளித்தனத்தை எதிர்ப்பவர்களுக்கு இதை எப்படி மறுதலிப்பது என்று கவலையாக இருக்கின்றது. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே வேறு பல 'அற்புதச் செயல்களை' ஆவியின் செயலென்று ஏற்றுக் கொண்டு விட்டதால் இதை மட்டும் ஆவியின் செயலில்லை என்று எப்படி அதிரடியாகக் கூறுவது என்பது அவர்களுடைய கவலை.

வேதத்தை மட்டுமே தேவனுடைய அதிகாரபூர்வமான வார்த்தை என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்து, அதற்கு வெளியில் இருந்தும் கர்த்தர் பேசுகிறார் என்று நம்பியதால் வந்த வினை இது. ஏனென்றால் வேதத்தைத் தூக்கியெறிந்து விட்டபிறகு, வேறு எதை வைத்து, கர்த்தருடைய பெயரைச் சொல்லி புதிது புதிதாக எழும்பிக் கொண்டிருக்கும் கோமாளித்தனத்தையெல்லாம் நிராகரிப்பது. ஆவியானவர் இது தவறு என்று எனக்கு வெளிப்படுத்தினார் என்று இனியும் எப்படிச் சொல்வது. ஏற்கனவே ஆவியானவரின் பெயரில்தானே இத்தனை அநியாயங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. வேதத்தை நம்பி ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும். வேதத்தை விட்டு சிறிதளவும் விலகினாலே போதும், வீண்வம்பை நாம் தேடிப் போக வேண்டியதில்லை. அது தானாகவே நம்மைத் தேடி வரும்.

\- அவதானி

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*மாகக் (இன்றியமையா நிலையில்) காணப்படுகின்றது." இங்கே உள்ளடக்கமாக அல்லது இன்றியமையா நிலையில் என்ற பதங்கள் வேதத்தில் நேரிடையான கட்டளைகள் (பத்துக் கட்டளைகளைப்போலத் தெளிவாக) அல்லாத முறையில் காணப்படும் தேவனுடைய கோரிக்கைகளைக் குறிக்கின்றது. இப்பகுதி திருமறையில் தேவன் தெளிவான கட்டளைகள் மூலம் மட்டுமல்லாது பொதுவான போதனைகள், மற்றும் பல உதாரணங்கள் மூலமாகவும் நாம் கைக்கொள்ள வேண்டிய நமக்குத் தேவையான அனைத்தையும் தந்துள்ளார் என்று எடுத்துக் காட்டுகின்றது. இவற்றை நாம் வேதப்பகுதிகளை ஆராய்ந்து அதில் காணப்படும் தெளிவானதும், எளிதில் நிலைநாட்டக்கூடியதுமான முடிவுகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். உதாரணமாகத் "திரித்துவத்தை" (Trinity) எடுத்துக் கொள்வோம். திரித்துவம் என்ற வார்த்தை வேதத்தில் எங்குமே காணப்படவில்லை. ஆனால் கிறிஸ்தவர்கள் அனைவருமே திரித்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறார்கள். அவ்வார்த்தை வேதத்தில் காணப்படாவிட்டாலும் அத்தத்துவம் வேதத்தில் தெளிவாகப் போதிக்கப்பட்டிருப்பது நாமனைவரும் அறிந்த உண்மை. இவ்விதமாகவே தேவன் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், சபை வாழ்க்கைக்கும் தேவையான பல போதனைகளை வேதத்தில் தந்துள்ளார். அவற்றை நாம் வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டு அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதேவிதமாகத்தான் நாம் சபை அங்கத்துவத்தையும் ஆராய வேண்டும். ஒருவர் சபையில் அங்கத்தவராக வேண்டும் என்ற வார்த்தைகளை வேதம் கொண்டிரா விட்டாலும், அதில் நாம் அவதானிக்கும் சபை அமைப்பு முறைகள் தெளிவாக திருச்சபை அங்கத்துவத்தின் அத்தியாவசியத்தை எடுத்துக் கூறுகின்றன. உதாரணமாக அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரம் 42 ஆம் வசனத்தில் பேதுருவின் பிரசங்கத்தைக்கேட்டு இரட்சிப்பைப் பெற்றுக் கொண்ட மூவாயிரம் பேர் அன்றைய தினம் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். ஏற்கனவே இருந்த நூற்றியிருபது பேரோடு இவர்களும் சபையில் அங்கத்தவராக சேர்ந்தார்கள். இங்கே ஆதி சபை எவ்வாறு உருவாயிற்று, அது எப்படி அமைந்தது என்று வேதம் விளக்கும்போது இதே உண்மைகளின் அடிப்படையில்தான் எதிர்காலத்தில் சபைகள் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.*

*அப்போஸ்தலனான பவுல்கூட இயேசுவை அறிந்துகொண்டபின் சபையில் சேரவேண்டியிருந்தது. அவன் எருசலேமுக்கு வந்தபோது அவனை சீசனென்று நம்பாமல் சபை தன்னோடு சேர்த்துக் கொள்ள மறுத்தது. பின்பு சோதித்து அவன் உண்மையிலேயே கிறிஸ்தவன் என்று அறிந்த பின்புதான் சபையில் சேர்த்துக் கொண்டார்கள் (அப்போஸ்தலர் 9:26-28). இன்னுமொரு உதாரணத்தையும் பார்க்கலாம். பவுல் 1 கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில், சபையில் அந்நியனைவிட மோசமாக நடந்து தன் தகப்பனின் மனைவியோடு தொடர்பு வைத்திருந்த மனிதனை சபையில் இருந்து உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை மூலம் அகற்ற வேண்டும் என்று வற்புறுத்தி எழுதுகிறார். இம்மனிதன் ஏற்கனவே சபையில் அங்கத்தவனாக இருந்த கிறிஸ்தவன். ஆகவேதான் ஒரு கிறிஸ்தவன் எப்படி அந்நியர்களைவிட மோசமாக நடந்து கொள்ள முடியும் என்று பவுல் கண்டிக்கிறார். சபையில் அங்கத்தவராக இருக்கும் ஒருவர் மேல்தான் சபை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியும். அம்மனிதன் சபை அங்கத்தவனாக இருந்ததால்தான் சபை அவனை ஒழுங்கு நடவடிக்கை மூலம் அகற்ற வெண்டும் என்று பவுல் வாதிக்கிறார். இங்கே இவ்வேதப்பகுதி சபை அங்கத்துவத்தின் அவசியத்தை வற்புறுத்துகிறது. இவ்வாறாக வேதத்தின் பல பகுதிகளில் திருச்சபை அங்கத்துவத்தைப்பற்றிய போதனைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் மேலே விளக்கிய முறையைப்பயன்படுத்தி பின்வரும் வேதப்பகுதிகளை ஆராய்ந்து பார்த்தால் சபை அங்கத்துவத்தைப்பற்றி வேதம் எந்தளவுக்கு வற்புறுத்துகிறது என்பதை உணரலாம் ( மத்தேயு 18:15-20; அப். 1:15; 5:11-13; 6; 9; 15:22; ரோமர் 14:1; 1 கொரி. 5; 14:24; 1 தீமோ. 5:17; எபிரேயர் 13:17)*

(வளரும்)